[1973 டிசம்பர் 3

காரணி கிராமத்தில் வேளாண்பொருள் கிடங்கு

***585 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணியில் விவசாயத் துணைக் கிடங்கு ஏற்படுத்துவதில் மேலும் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காரணிக் கிராமத்திற்கு உடனடித் திட்டம் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : என் பிறந்த ஊரான இந்தப் பகுதியில் ஏராளமான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஆரணியாற்றைத் தாண்டி இரண்டு பஸ்களைப் பிடித்து கும்முடிப்பூண்டிக்குப் போக வேண்டியிருக்கிறது. 62 ஊராட்சிகளைக் கொண்ட இந்த ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு துணைக் கிடங்குகள்தான் இருக்கின்றன. ஆகவே, சிறப்பு நடவடிக்கை எடுத்து ஒரு துணைக் கிடங்கை காரணியில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதை உடனடியாகக் கவனிப்பதற்கில்லை என்றுதான் சொன்னேன். ஏனென்றால், ஒரு மைலுக்கு அப்பாலுள்ள ஆரணியில் ஒரு டெப்போ இருக்கின்ற காரணத்தால், காரணியில் மற்றொன்று உடனடியாகத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

வான்கோழி வளர்ச்சித் திட்டம்

***586 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வான்கோழி வளர்ச்சித் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கோழி வளர்ப்புக் கழகம் 'பௌல்ட்ரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்' கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.